Crl.Misc.39

# D E P O S I T I O N   O F   W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.104/2022

**P.W**.1

| | |
|---|---|
| Name | : திரு.செல்வம் |
| Father/Husband Name | : திரு.ரங்கநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது உத்திரமேரூரில் குடியிருந்து ஓரிக்கை பணிமனையில் அரசு போக்குவரத்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 20.6.2018 ம் தேதி மாமல்லபுரத்திலிருந்து காஞ்சிபுரம் நோக்கி 212 ஏ/ஏ தடம், பதிவு எண்.டி.என்.21 என் 1644 பதிவு எண் கொண்ட பேருந்தை நான்ஓட்டி சென்றபோது திருக்கழுக்குன்றம் ஆசிரியர் நகர் அருகே இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் மோதுவது போல் வந்தார்கள். நான் அவர்களை பார்த்து போகுமாறு சொன்னேன். அதற்கு அவர்கள் இருவரும் என்னை அசிங்கமாக திட்டினார்கள். அவர்களது இருசக்கர வாகனத்தை பஸ்சிற்கு முன்னால் நிறுத்தி வண்டியில் ஏறி என்னை கையால் அடித்து குத்தினார்கள். இது குறித்து

திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள இரண்டு எதிரிகளும் தான் அன்றைய தினம் என்னிடம் தகராறு செய்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

புகார் மனுவை நடத்துனர் அசோக்குமார் எழுதினார். நான் அதில் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது இருட்டாக இருந்ததா என்றால் ஆமாம். புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெற்றார்களா என்றால் இல்லை. போலிசார் சொல்லி இன்று நீதிமன்றத்தில் எதிரிகளை அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எதிரிகள் வண்டியை மறித்து தகராறு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் முதல் உதவியோ, சிகிச்சையோ எதுவும் பெறவில்லை என்றால் பெற்றேன். ரசீதுகள் இல்லை. எதிரிகள் என்னை தாக்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று வழக்கில் கண்ட பேருந்தை நான் ஓட்டியதாக காட்டும் டிரிப் சீட் எதுவும் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தன்று பணியில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her.  It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.